**சுற்றாடல் அமைச்சு**
தேசிய ஓசோன் கூறு

**வியன்னா சம்மேளனத்தின் 25 ஆம் ஆண்டு விழா தபால் முத்திரையின் பொருட்டு நடாத்தப்படுகின்ற தீவு முழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கான ஓவியப் போட்டி**

சுற்றாடல் அமைச்சில் தேசிய ஓசோன் கூறு மற்றும் இலங்கை தபால் திணைக்களத்தின் முத்திரை பணியகம் ஒன்றிணைந்து வெளியிடும் ஓசோன் படலத்தை பாதுகாப்போம் எனக் குறிப்பிடுகின்ற, வியன்னா சம்மேளனத்தின் 25 ஆம் ஆண்டு விழாவிற்கான தபால் முத்திரையின் பொருட்டு பொருத்தமான ஓவியம் ஒன்றை தெரிவு செய்யும்பொருட்டு தீவு முழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கான ஓவியப் போட்டி ஒன்று நடாத்தப்படுகின்றது.

**தலைப்பு - ஓசோன் படலத்தை நிலையாக பாதுகாப்பதற்கான வியன்னா சம்மேளனத்தின் 25 ஆம்ஆண்டு விழாவை நினைவுகூருகிறோம்.**

**போட்டிக்கான நிபந்தனைகள்:**

1. தலையங்கத்திற்கமைவாக நீளம் 16" x அகலம் 12" அளவுள்ள தாளில் ('கென்ட்' இன தாள் மிகவும்பொருத்தமானது) ஓவியத்தை சமர்ப்பித்தல் வேண்டும்;

2. சுற்றுக்கும் 1/2 அங்குல ஓரம் விடப்பட்டு ஓவியம் வரைதல் வேண்டும். நிற தீட்டுவதற்காக நீர் வர்ணம், எண்ணெய்வர்ணம், பெஸ்ரல் உட்பட எவ்வித வர்ணமும் உபயோகிக்கலாம்.

3. சமர்ப்பிக்கும் ஓவியத்தின் பின்பக்கத்தில் மாணவ/மாணவியின் பெயர், பிறந்த திகதி, 31.12.2010 ஆந் திகதியன்று வயது, முகவரி, பாடசாலையின் பெயர் மற்றும் கல்வி கற்கும் தரம் முதலியவற்றை தெளிவாக குறிப்பிட்டு (கணனியில் பதிவதற்கு தகவல்களை ஆங்கில மொழியில் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமானதாகும்) ஓவியம் தான் வரைந்ததென தான் கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் கையொப்பமிடப்பட்டு பதவி முத்திரையிடப்பட்டுசான்றுபடுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. ஒருவருக்கு ஒரு ஓவியம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

5. ஓவியத் தேர்வு சட்டமுறையான நடுவர்கள் சபையின்கீழ் நடைபெறுவதுடன் நடுவர் சபையின் தீாவே இறுதியானதாகும்.

6. தபால் முத்திரைக்காக தெரிவு செய்யப்படுகின்ற வெற்றிபெறும் ஓவியத்திற்கு 5,000 ரூபா பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

7. தபால் முத்திரைக்காக பொருத்தமான ஓவியத்தை தேர்ந்தெடுத்தப்பின்னர், எஞ்சியுள்ள ஓவியங்களினுள் தலைப்பிற்கு பொருத்தமான மற்றும் திறமையைக் காட்டுகின்ற கீழே காட்டப்பட்டுள்ள வயதுக் குழுவினர்கீழ் தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் 9 பொருட்டு (ஒவ்வொரு வயது குழுவினர் அடிப்படையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் என) பணப்பரிசும் சான்றிதழும் சர்வதேச ஓசோன் தினத்தன்று (செப்தெம்பர் 16) இலங்கையில் நடைபெறும் விழாவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.-
வயதுக் குழுவினர்- 31 திசெம்பர், 2010 ஆந் திகதியன்று
11 வயதிற்குகீழ்; வயது: 11-15 வருடங்கள்வரை; வயது: 15-18 வருடங்கள்வரை.

8. ஓவியம் இடப்பட்ட உறையின் இடதுப்பக்க மேல்மூலையில் 'தபால் முத்திரை - ஓவியப் போட்டி' எனக் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளும் இறுதி தினமாகிய 2010, யூன் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால்மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம்:-
**'பணிப்பாளர், தேசிய ஓசோன் கூறு, இல. 980/4, விக்ரமசிங்ஹ இடம், எத்துள்கோடடே, கோட்டே'**

9. தபால் முத்திரையின் பொருட்டு ஓவியத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு முத்திரைப் பணியகதிற்கும் மற்றும் ஏனைய ஓவியங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தேசிய ஓசோன் கூறுவிற்குமே உரியதாகும்.

10. வெற்றிபெறும் ஓவியங்கள் தவிர்ந்த எஞ்சியவற்றில் உமது ஓவியத்தை பெற விரும்பினால் செத்தெம்பர் 16 இற்கு பின்னர் தேசிய ஓசோன் கூறில் பெற்றுக்கொள்ளலாம்.

11. தேசிய ஓசோன் கூறு மற்றும் முத்திரைப் பணியகத்தில் பதிவுசெய்துள்ள ஓவியர்களின் குடும்பங்களின் அங்கத்தினர்களுக்கு இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்க உமது ஓவியத்தை அனுப்ப வேண்டுவதுடன், அந்நிபந்தனைகளுக்கமையாத மற்றும் ஓவியர்கள் பற்றிய பூர்த்தியடையா தகவல்கள் அடங்கிய ஓவியங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்திற் கொள்க.

மேலதிக விபரங்களுக்கு தேசிய ஓசோன் கூறின் தொலைபேசி இல. 011-2883417 உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் உமக்கு தேவையான விபர ஆவணங்களை தேசிய ஓசோன் கூறுவில் வந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு.**